**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.514/2019**
**Prosecution Witness P.W. 10**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. M.அபிமன்யு | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **02.04.2025**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை:**

நான் தற்போது மதுரைமாவட்டம் தனிப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 08.04.2019ம் தேதியன்று நான் அண்ணாநகர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது விருதுநகரைச் சேர்ந்த கோவிந்தராஜ் மனைவி விஜயா என்பவர்நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை 15.30 மணிக்கு பெற்று, நிலையக்குற்ற எண்.296/2019 ஆக சட்டப்பிரிவு 174 குவிமுச-ன் கீழ் வழககு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த அச்சுப்படிவ முதல்தகவல்அறிக்கை **அ.சா.ஆ.**7 ஆகும். இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று, சாட்சிகள் ரபிக்ராஜா, புலிப்பாண்டி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். நான் தயார் செய்த பார்வைமகஜர் அ.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது, நான் தயார் செய்த மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.**8 ஆகும். பின்பு இந்த வழக்கில் இறந்து போன கோவிந்தராஜ் என்பவரது பிரேதத்தை கடந்த 09.04.2019ம் தேதி காலை 8.00 முதல் 10.00 மணி வரை மதுரை அரசு மருத்துவமனையில் சவக்கிடங்கில் பஞ்சாயத்தார் முன்னிலையில் ஒரு பிரேதவிசாரணை அறிக்கை தயார் செய்தேன், நான் தயார் செய்த பிரேதவிசாரணை அறிக்கை **அ.சா.ஆ.**9 ஆகும். இந்த வழக்கில் சாட்சிகள் விஜயா, சேகர், ரபிக்ராஜா, புலிப்பாண்டி, ஷேக்அப்துல்லா, செல்வம், கோதண்டபாணி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரி ஆஜர் எதிரி தான். சாட்சிகள்

ஷேக்அப்துல்லா, செல்வம், அப்துல்ரகுமான், ராஜசேகர் ஆகியோர்கள் என்னுடைய புலன்விசாரணையில் நான் பதிவு செய்த 161 குவிமுச வாக்குமூலத்தில் சொன்ன மாதிரி சொல்லியுள்ளார்கள்.

**குறுக்குவிசாரணை**

நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அ.சா.1 புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றும், வழக்கில் பார்வைமகஜர், மாதிரிவரைபடம் பின்னிட்டு காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல, இந்த வழக்கின் ஆவணங்கள், வாக்குமூலங்கள் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கிற்கும், எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. உயரதிகாரிகளின் வேண்டுகோளுக்கு இணங்க எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சுருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx
முதன்மை மாவட்ட நீதிபதி,
மதுரை.